

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (19.10.2024) சென்னை, புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்று வரும் குடமுழுக்கிற்கான திருப்பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் இணை ஆணையர்கள் கி. ரேணுகாதேவி, திருமதி. வான்மதி, துணை ஆணையர் இரா. ஹரிஹரன், திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் டாக்டர் வெற்றி குமார். அறங்காவலர்கள் திருமதி. லீலாவதி, குமாரசாமி. ரத்தினம், செயல் அலுவலர் ராமராஜன் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

புரசைவாக்கம்,

# கங்காதீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நவ. 28ஆம் தேதி நடைபெறுகிறது!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, அக் 20-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (19.10.2024) சென்னை, பாரிமுனை, காளிகாம்பாள் திருக்கோயிலில் புதிய வெள்ளி திருத்தேர் திருப்பணிகளை ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

2021 ஆம் ஆண்டு இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ஒட்டுமொத்த தமிழகத்தில் இருக்கின்ற மரத்தேர்கள், வெள்ளித்தேர்கள், தங்கத்தேர்கள் பக்தர்களின் நேர்த்திக் கடனுக்கு பயன்படாமல் இருந்தவற்றை நேர்த்திக்கடனுக்கு கொண்டு வருவதும், புதிதாக மரத்தேர், தங்கத்தேர், வெள்ளித்தேர் வேண்டுமென்ற பக்தர்களின் கோரிக்கைக்கு ஏற்ப பல்வேறு புதிய அறிவிப்புகளை தமிழக முதல்வர் உத்தரவின் பேரில் அறிவிக்கப்பட்டு அந்த பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் நடந்து வருகின்றன. அதன்படி இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு சுமார் 59 கோடி ரூபாய் மதிப்பில் 97 புதிய மரதேர்கள் செய்கின்ற பணி நடந்து வருகின்றன. பழுதடைந்த மரதேர்கள் சுமார் 11.89 கோடி ரூபாய் செலவில் 53 மரத்தேர்கள் மராமத்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

வெயில், மழை போன்றவற்றால் தேர்கள் சேதாரம் இல்லாமல் இருப்பதற்கு சுமார் 28 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் 172 திருத்தேர்களுக்கு கொட்டகை அமைக்கின்ற பணி கொட்டகை அமைக்கின்ற பணி நடைபெற்று வருகின்றன. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 29 கோடி ரூபாய் செலவில் 5 புதிய தங்கத் தேர்களும், 27 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் 9 புதிய வெள்ளித் தேர்களும் செய்வதற்கு அறிவித்திருந்தோம். அதில் பெரியபாளையம் தங்கத்தேர் மற்றும் திருத்தணி வெள்ளித்தேர் முடிவுற்று பக்தர்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது.

திருக்குளங்கள், புதிய திருமண மண்டபங்கள், அன்னதான கூடங்கள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், அர்ச்சகர் மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு, பெருந்திட்ட வரைவு என்றாலும் சரி இந்த ஆட்சியில் இந்த துறையைச் சார்ந்த அனைத்து பகுதிகளையும் ஒன்று விடாமல் ஆய்வுகள் நடத்தி அனைத்தையும் மேம்படுத்துகின்ற ஒரு மகத்தான பணியை இந்த திராவிட மாடல் ஆட்சி ஏற்படுத்திருக்கின்றது. சுமார் 19 திருக்கோயில்கள் மட்டும் 1,530 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வரைவின் கீழ் திருப்பணிகள் நடந்து வருகின்றன. அதில் பவானி அம்மன் திருக்கோயிலில் 160 கோடி ரூபாய் செலவிலும், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சுமார் 300 கோடி ரூபாய் செலவிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. தமிழ்நாடு முதல்வர் அடிக்கல் நாட்டிய பிறகு அந்த பெருந்திட்ட வரைவிலே எடுத்துக் கொள்ளப்பட்ட முடி காணிக்கை மண்டபம், அன்னதான கூடம், சுகாதார வளாகம், நீரேற்று நிலையம் ஆகிய பணிகளை தமிழக முதலமைச்சர் கடந்த 14ஆம் தேதி துவக்கி வைத்தார்கள்.

இந்த வகையில் எடுத்துக்கொண்ட பணிகள் அனைத்தையும் நேர்த்தியோடு நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து இது போன்ற ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றோம். அறிவிக்கப்பட்ட ஒன்பது வெள்ளித்திருத்தேர்களில் காளிகாம்பாள் திருக்கோயிலின் திருத்தேர் பணிகள் மரத்தேர் பணி முடிவுற்று இன்றைக்கு சுமார் 2 கோடியே 17 லட்சம் ரூபாய் செலவில் வெள்ளித் தகடு பதிக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்பணிக்கு திருக்கோயிலில் இருந்த 100 கிலோ வெள்ளி பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. திருக்கோயிலைச் சேர்ந்த காளிதாஸ் சுவாமி 120 கிலோ அளவிற்கு பல்வேறு நன்கொடையாளர் வாயிலாக இந்த திருத்தேருக்கு வெள்ளியை உபயமாக பெற்று தந்துள்ளார். இந்த வெள்ளித்தேர் 2025 மார்ச் 1 அன்று பக்தர்களின் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருக்கோயில்களை பொறுத்தவரை மாண்பமை உயர்நீதிமன்றம் சுட்டிக் காட்டுகின்ற அனைத்து பணிகளையும் விரிவுபடுத்தி அவற்றை நேர்த்தியுடன் செய்து நீதிபதிகளின் பாராட்டை பெறுகின்ற துறையாக இந்து சமய அறநிலையத்துறை இருக்கின்றது. தமிழக முதல்வர் ஆட்சி காலத்தில் தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு ஒரு லட்சம் தலமரக் கன்றுகளை நடுகின்ற பணியை துவக்கினோம் தமிழ்நாடு முழுவதும் ஒரு லட்சம் தலமரக்கன்றுகளை நட்டு நிறைவு செய்திருக்கிறோம். மேலும், சமூக ஆர்வலர்கள் மரக்கன்றுகன் நடுகின்ற பணிக்கு விண்ணப்பிக்கின்ற போதும் அதற்கும் உண்டான அனுமதியை தருகின்றோம். அந்த வகையில் உணவுத்துறை அமைச்சர் சுமார் 2 லட்சம் மரங்களை திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் தன்னார்வலர்கள் வாயிலாக நடுவதற்கு அனுமதி தந்து அந்தப் பணியும் நிறைவுற்று இருக்கின்றது.

கள்ளழகர் கோயிலில் சுமார் 25 லட்ச ரூபாய் செலவில் நந்தவனம் அமைக்கப்பட்டு அந்த நந்தவனத்தில் பூக்கின்ற பூக்கள் தெய்வத்திற்கு உண்டான தினந்தோறும் வழிபாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திற்கு சுமார் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வருகை தந்தார்கள். இந்த ஆண்டு சுமார் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வருகை தருவார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் கடந்த ஆண்டு செய்த ஏற்பாடுகளை போல் கூடுதலாக 30 லிருந்து 40% ஏற்பாடுகளை செய்திட திட்டமிட்டு இருக்கின்றோம். துணை முதலமைச்சர் அவர்களும், மாவட்ட அமைச்சர் எ.வா.வேலு அவர்களுடன் இணைந்து கிரிவலப் பாதையை ஆய்வு செய்தோம். அதில் பெருந்திட்ட வரைவின் கீழ் ரூபாய் 36 கோடி செலவில் வெகுவிரைவில் இந்த மாத இறுதிக்குள்ளாக தமிழக முதல்வர் அந்த பணியை துவக்கிட உள்ளார்கள். கிரிவலப் பாதையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாவட்ட அமைச்சர் இரண்டு இடங்களில் சுகாதார வளாகங்களும், அதேபோல் மூன்று இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற நிலையங்களையும் அமைக்கின்ற பணியிலே ஈடுபட்டு இருக்கின்றார். மேலும், அதேபோல் சுகாதார வளாகங்கள் தனியார் பங்களிப்புடன் மூன்று இடங்களில் கட்டப்பட்டு வருகின்றது. கார்த்திகை தீபத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு இப்பணிகளை ஆய்வு செய்ய உள்ளோம்.

கடந்த முறையை போல் இந்த ஆண்டும் கடந்த எவ்வித சிறு அசம்பாவிதமும் இல்லாமல் சிறப்பாக இந்த தீபத் திருவிழா நடத்துவதற்கு முன்னேற்பாடுகள் மற்றும் ஆலோசனைகளை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கியுள்ளார். மேலும், பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் உணவு, தங்கும் வசதிகள், துப்புரவு பணிகள், மருத்துவ வசதி போன்ற அனைத்தும் சிறப்பான வகையில் செய்து தரப்படும்.

ஆளுநர் ஒரு பாடல் வரிலே வரும் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனி என்று அதுபோல் தினம் தினம் ஏதாவது ஒரு வகையில் பரபரப்பை உண்டாக்கி தன்னை நோக்கி ஊடகங்கள் வர வேண்டும் என்று நினைப்பிலே பல செயல்களை செய்து கொண்டிருக்கின்றார் அவர் எந்த சூழலில் எதை கையில் எடுத்தாலும் அதற்குண்டான உரிய பதிலை கொடுத்து துணிந்து நின்று அதற்குண்டான எதிர்மறை கருத்துக்களை கூறுவதில் தமிழக முதல்வர் எந்நாளும் பின்வாங்க மாட்டார் அதற்குண்டான நடவடிக்கையிலும் தமிழக முதல்வர்கள் உறுதியாக இருப்பார் ஆளுநர் உடைய பேச்சு அன்றோடு போச்சு.

புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்திட திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு நவம்பர் மாதம் 28- ஆம் தேதி குடமுழுக்கு நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஆர்.வான்மதி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் இ.எம்.எஸ். மோகன், திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் இரா. ஹரிஹரன், உதவி ஆணையர் சிவக்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை திருவொற்றியூர் தொகுதி எண்ணூரில் உள்ள அசோக் லேலண்ட் தனியார் கனரக வாகனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் ஒப்பந்த தொழிலாளராக பணியாற்றி வந்த லூர்து சபரிராஜன் கடந்த 16ஆம் தேதி தொழிற்சாலை கேன்டீனுக்கு உணவு சாப்பிட சென்றபோது சுரங்கப் பாதையில் நிரம்பி இருந்த மழை நீரில் எதிர்பாராமல் தவறி விழுந்து உயிரிழந்தார். உயிரிழந்த லூர்து சபரிராஜன் குடும்பத்துக்கு நிவாரண உதவி வழங்க வேண்டுமென மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ.விடம் பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக தெரிவித்தார். இதனை தொடர்ந்து முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, லூர்து சபரிராஜனின் குடும்பத்திற்கு தமிழக முதல்வரின் பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூபாய் 4 லட்சம் நிவாரணத் தொகையை திருவொற்றியூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாச்சியர் திருமதி சகாயராணி முன்னிலையில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவரணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் லூர்து சபரி ராஜனின் மனைவி அந்தோணி இருதய விமலாவிடம் வழங்கினார். வருவாய் ஆய்வாளர் பிரேமா மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி, 74 (அ) வட்டம், ஆதிசேஷ் நகர் முதல் தெருவில் 15.10.2024 அன்று கனமழையினால் பதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவிடும் விதமாக சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, சென்னை கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளரும், தலைமை பொதுக்குழு உறுப்பினருமான லயன் பி.உதயசங்கர் ஏற்பாட்டில் 400 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உணவு வழங்கப்பட்டது. உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கூவாய் இளங்குயிலே!



ஏட்டைத் திருப்பி, இந்தி
எழமீண்டும் துடிக்கிறது!
சாட்டைஎடுப் பான்தமிழன்!
சண்டிஇந்திக் குதிரை,அதன்
சேட்டை ஒடியும்என்றும்
செங்கோட்டை யின்கனவுக்
கோட்டை இடியும்என்றும்
கூவாய் இளங்குயிலே!

துதிக்கும்உங்கள் இந்தியினைத்
தூக்கி,எங்கள் மொழிப்பற்றை
மிதிக்க நினைப்பீரேல்,
மேலாதிக் கச்சுவடு
பதிக்கத் துடிப்பீரேல்,
படைமறவர் பெருங்கூட்டம்
குதிக்கும் களத்தில்! எனக்
கூவாய் இளங்குயிலே!

வாடிக்கை யான(து)இந்தி
வாலாட்டம்! இனியும்இந்த
வேடிக்கை ஆணவத்தை
வேரோ டறுக்காமல்
நீடிக்க விடலாமா?
நெருப்பெடுத்துப் பதினாறு
கோடிக்கை நீளும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

சொந்தமண்ணில் "நீட்" கொடுத்த
சோகம்இன்னும் தீரவில்லை!
வெந்தபுண்ணில் இந்திஎன்னும்
வேல்பாய்ச்ச முனைவாரேல்,
செந்தமிழர் தாய்மண்ணில்
தெருதோறும் உணர்வலைகள்
கொந்தளிக்கும்! என்றுசொல்லிக்
கூவாய் இளங்குயிலே!

நஞ்சருந்தித் தீக்குளித்து
நந்தமிழைக் காப்பதற்கே
நெஞ்சுயர்த்தி இன்னுயிரை
நீத்தார்தம் நினைவலைகள்
சஞ்சரிக்கும் சுடுகாட்டுச்
சாம்பலில் இருந்(து) அக்னிக்
குஞ்சுகள் கிளம்பும்! எனக்
கூவாய் இளங்குயிலே!

ஐயா,அண் ணா, கலைஞர்
அவர்கள்இல்லை எனும்திமிரா?
தொய்வறியாத் "தளபதி"யின்
சுட்டு விரலசைந்தால்
எய்த நினைக்கும்உங்கள்
"இந்திவெறிக் குறிக்கோளைக்"
கொய்(து)எறிவான் தமிழன்!எனக்
கூவாய் இளங்குயிலே!

கருத்துமொழி! கவிதைமொழி!
காவியங்கள் விளைத்தமொழி!
கிருத்து பிறக்குமுன்பே
கிளைவிரித்துத் தழைத்தமொழி!
திருத்தமிகு தமிழ்மொழிக்கோர்
தீங்குவிளைத் தால்,இந்திக்
குருத்தெலும்பு முறியும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

மறப்போமோ வரலாற்றை?
மாநிலத்தின் உரிமைகளைப்
பறிப்பாரேல் பொறுப்போமோ?
பார்த்துக்கொண் டிருப்போமோ?
வெறுப்பேற்றும் இந்தியினை
விரட்டுதற்கே, அறப்போர்க்குக்
குறிப்பார்ஓர் நாள்!என்று
கூவாய் இளங்குயிலே!

வம்புக்குச் செல்லமாட்டான்!
வலியவந்தால் விடமாட்டான்!
"தம்பியர்" பற்றி, அண்ணா
தான்வரைந்த கடிதம்இது!
தெம்புடைய தாய்மொழியைத்
தீண்டுவரேல், இந்திமொழிக்
கொம்புடைந்து நொறுங்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

பகைவிட்டுப் போகும்எனப்
பண்பாடு காத்துவந்தோம்!
மிகைவிட்டுப் போகாமல்
மென்மேலும் வடபுலத்துப்
புகைவிட்டுப் பரப்புவரேல்,
புலிச்சீற்றத் தமிழ்க்கூட்டம்
குகைவிட்டுப் பாயும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

தண்டுவடம் வளைந்தவர்கள்
தலைகவிழ்ந்தார் உங்களிடம்!
ஒண்டமிழ்த்தாய் மொழிகாக்கும்
"உதயநிதி ஸ்டாலின்" படைத்
தொண்டரடா நாங்கள்! எனத்
தோள்நிமிர்த்திப் புயல்வேகம்
கொண்டெழுந்தார் வீரர்! எனக்
கூவாய் இளங்குயிலே!

குழந்தையுடன் தாய்வருவாள்!
குமுறிஎழு வார்இளைஞர்!
விழுந்துப் படுத்துறங்கும்
வீட்டு முதியவரும்
எழுந்துப் புறப்படுவார்!
எட்டுத் திசைகளும், தீக்
கொழுந்து தெறிக்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

" பண்டிதரின் வாக்குறுதி"
பறக்கிறதே காற்றில்! அதைக்
கண்டுகொள்ள மறுக்கிறதே
கல்நெஞ்சம்! "தாமரை" யின்
தண்டறுந்து போகும்! எங்கள் .
"தமிழ்க்கோபம்" ஏவுகணைக்
குண்டைவிட வலியதெனக்
கூவாய் இளங்குயிலே!

காட்டாட்சி தொடராமல்
காவிநிறம் படியாமல்
நாட்டாட்சி "இறையாண்மை"
நலியாமல், தில்லியிலே,
பாட்டாட்சி நிலவுதல்போல்
"பன்முகத்தன் மை" போற்றும்
கூட்டாட்சி மிளிர்க! எனக்
கூவாய் இளங்குயிலே!

தொடராதீர் மொழிவெறியை!
தூங்கும்என்று வேங்கையின்கால்
இடறாதீர்! ஆளுநரே!
எரிமலைகள் வெடிக்கின்ற
திடலாகும் தமிழ்நாடு!
" திராவிடநல் திருநாட்டில்"
கொடியஇந்தி வீழும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

கவிச்சுடர்
கவிதைப்பித்தன்



அரசு ஊழியர்கள் – ஆசிரியர்களுக்கு

# அகவிலைப்படி உயர்வை அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவன தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, அக். 20-

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு 3% விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்க உத்தரவிட்டு சொல்வதைத் தான் செய்வேன், செய்வதைத் தான் சொல்வேன் என்ற தாரக மந்திரத்தோடு ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்ட மைப்பு சார்பில் நெஞ்சார்ந்த நன்றி என நிறுவனத் தலைவர் சா.அருணன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள் ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசு ஊழிநர்களுக்கு 3% விழுக்காடு உயர்த்தி 50% விழுக்காடாக இருந்த அகவிலைப்படி உயர்வை 53% விழுக்காடாக உயர்த்தி வழங்கி சொல்வதைத்தான் செய்வேன், செய்வதைத்தான் சொல்வேன் என்ற தாரக மந்திரத்தை பறைச்சாற்றும் விதமாக இன்று அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஓய்வூதியர்களுக்கு அகலவிலைப்படியை உயர்த்தி உள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அதாவது கொரோனா பேரிடர் காலத்தில் சென்ற ஆட்சியாளர்களால் அகவிலைப்படி உயர்வு நிறுத்தப்பட்டது பின்பு ஆட்சிக்கு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை சீராக சீராக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகள் ஒன்றொன்றாக நிறைவேற்றுவேன் என அறிவித்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு நிறுத்தப்பட்ட அகவிலைப்படி உயர்வை ஒன்றிய அரசு உயர்த்தியபோது நிதிநிலை காரணமாக 6 மாதம் கழித்து வழங்கினார் பின்பு ஓரளவு நிதிநிலை சீரானதும் சென்ற ஆண்டு ஒன்றிய அரசு எப்போதெல்லாம் அகவிலைப்படியை உயர்த்தி வழங்குகிறதோ அப்போதெல்லாம் அதே தேதியிட்டு வழங்குவேன் என அறிவித்து உயர்த்தி வழங்கி , அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலராக திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மறுவுருவமாக திகழ்கிறார் என்பதற்கு இதுவே சான்றாகும்

மேலும் அரசு ஊழியர்களின் நீண்டநாள் கோரிக்கையான புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத்தையும் , ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்தையும் , பகுதிநேர சிறப்பாசிரியர்களின் பணி நிரந்தரம் , இடைநிலை ஆசிரியர்களின் சம வேலைக்கு சம ஊதிய முரண்பாடு, அனைத்துத்துறை தூய்மை பணியாளர்களை பணிநிரந்தரம் செய்வது உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளை வரும் ஆண்டுகளில் இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறவேற்றுவார் என்பதில் ஐயம் இல்லை

அகவிலைப்படியை உயர்த்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை தமிழ்நாடு அரசு ஊழிர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நெஞ்சார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் தெரிவித்துள்ளார்.